# இறப்புக்கு முன்னும் பின்னும் வாழ்வு

## பைபிள் கருத்துக்களின் ஒரு தொகுப்பு

*R. ஸ்டான்லி*

இறப்பு என்பது நிச்சயம்.
அது தவிர்க்க முடியாதது.
எவரும் அதற்குத் தப்ப முடியாது.
மனிதன் பாவம் செய்ததைத் தொடர்ந்து கடவுள் அதை நியமித்தார்.
அறிவியல் அதனைத் தடுக்க முடியாது.
செல்வம் அதனைத் தள்ளிவிட முடியாது.

வாழ்வை இறப்பு இரண்டாகப் பிரிக்கிறது:
ஒன்று மண்ணுலக வாழ்வு,
அடுத்தது விண்ணுலக வாழ்வு.
மண்ணுலக வாழ்வு தற்காலிகமானது,
விண்ணுலக வாழ்வோ நிரந்தரமானது.
இறப்புக்கு முன்னுள்ள வாழ்வு குறுகியது,
இறப்புக்குப் பின்னுள்ள வாழ்வோ முடிவில்லாதது.

இறப்புக்குமுன் மனிதனின் வாழ்விடம் புவி மண்டலம்,
இறப்புக்குப்பின் அவன் வாழப்போவது ஆவி மண்டலம்.
இவ்வுலகில் நல்லதும் தீயதும் சேர்ந்தே இருக்கும்,
இனிவரும் உலகிலோ அவை வேறுபிரிக்கப்படும்.
நல்லது மட்டுமே இருக்கும் இடம் சொர்க்கம்,
தீயது இருக்கும் இடம் நரகம்.
சொர்க்கத்திலேயே இறைவனது ஆசனம் உண்டு.
சாத்தானும் அவனது தீய சக்திகளும் நரகத்தில் தள்ளப்படுவர்.

மோட்சம் மற்றும் நரகம் ஆகிய இரண்டும் நிசமானவை.
மோட்சத்தில் என்றென்றும் ஆனந்தம் உண்டு,
நரகத்திலோ முடிவில்லாத அங்கலாய்ப்பே உண்டு.
கடவுளுக்குக் கீழ்ப்படிவோருக்கு மோட்சத்தில் பரிசு உண்டு,
அவரைத் தள்ளிவிடுவோரோ நரகத்தில் தண்டிக்கப்படுவர்.

நாம் மோட்சத்திற்குள் நுழைவது எங்ஙனம்?
“நானே வழி” என்றார் இயேசு.
“வேறு வழியில்லை” என்றும் அவர் அழுத்திச் சொன்னார்.
எந்த மதமும் மனிதனை “இரட்சிக்க” முடியாது.
மதங்கள் மனிதனுக்கு “அறிவுறுத்த” மட்டுமே முடியும்.
மனிதனது தேவையோ ஓர் இரட்சகர்.
இயேசு கிறிஸ்துவே உலக இரட்சகர்.
பாவிகளை இரட்சிக்கவே அவர் உலகிற்குள் வந்தார்.

...2

சொர்க்கத்திற்குள் நுழைவதை மனிதனுக்குத் தடுப்பது பாவமே.
பாவத்தின் தண்டனை நிரந்தரமாய்க் கடவுளைவிட்டுப் பிரிக்கப்படுவதே.
மனுக்குலத்தின்மீது அளவிலாது அன்பு செலுத்திய இறைவன் தமது ஒரே மகன்
இயேசுவை அனுப்பி அவரைப் பாவத்திற்குப் பரிகாரமாய்ப் பலியாக்கினார்.
2000 ஆண்டுகட்கு முன்னர் சிலுவையில் இயேசு உயிர் துறந்தார்.
மூன்றாம் நாள் உயிருடன் எழுந்துவிட்டார்.
அவரது இரத்தம் எல்லாப் பாவங்களையும் கழுவ முடியும்.
அவரை நம்புவோருக்கு மட்டுமே இது பலிக்கும்.

பாவம் என்றால் என்ன?
அது அவபக்தியான சிந்தனைகள், சொற்கள் மற்றும் செயல்கள் ஆகும்.
அது கடவுளுக்கு எதிரான முரட்டாட்டம்.
அது மற்றவர்களை நம்மைப்போல் நேசிக்கத் தவறுதல்.
அது பைபிளில் உள்ள இறைக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாதிருத்தல்.
மனம் மாறி எளிய நம்பிக்கையுடன் கிறிஸ்துவிடம் வருபவன்
அந்த நொடியிலேயே பாவ மன்னிப்பு பெறுகிறான்.
அவன் கடவுளுடைய பிள்ளை ஆகிவிடுகிறான், புதுப்பிறப்பு அடைந்துவிடுகிறான்.

நண்பரே,
உங்களது நித்திய முடிவை இன்றே நீங்கள் தீர்மானிக்கலாம்.
கடவுள் உங்களை நேசிக்கிறார்.
நரகில் உங்கள் ஆன்மா அவதிப்படுவதை அவர் விரும்புவதில்லை.
அவருடன் பரலோகில் நீங்கள் என்றும் சுகித்திருக்கவே விரும்புகிறார்.
இயேசுவானவர் சீக்கிரம் திரும்ப வரவிருக்கிறார்.
இன்று இரட்சகராய் இருக்கும் அவர் நாளை நீதியரசராய் இருப்பார்.

நாளைக்கு மனம் மாறி விடலாம் என்று தள்ளிப்போடாதீர்,
இன்றைக்கே நீங்கள் இறக்க நேரிடலாம்.
உங்களது பழைய தீய வாழ்வுக்கு வந்தனம் சொல்லிவிட்டு
இப்பொழுதே இயேசுவிடம் வாருங்கள்.
அவரால் மன்னிக்கப்பட முடியாத கொடிய பாவம் எதுவுமில்லை.
அவர் தரும் இலவச மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
அவரை உங்கள் சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொள்ளுங்கள்.
நீங்கள் ஒரு புது மனிதனாய் மாறிவிடுவீர்கள்.
இயேசுவே மெய்யான ஒளியானவர். அவர் உங்களைப் பிரகாசிக்கப்பண்ணுவார்.
உங்களது வாழ்வு முழுவதுமாய் மாறிவிடும்.

பாவச் சோதனைகள் மீது வெற்றி காண இயேசு வலிமை தருவார்.
கடவுளது கையிலிருந்து சாத்தான் உங்களைப் பறிக்கமுடியாது.
உங்கள் வாழ்வு பத்திரமாய் இருக்கும். நீங்கள் நம்பிக்கையுடன் இறக்கலாம்.
இப்பாழுலகில் நீங்கள் கண்மூடும் வேளையில்
பரலோகில் நேரடியான தேவ சன்னிதியில் கண் திறப்பீர்கள்.

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதே இத்தனை வேறுபாட்டிற்கும் காரணமாகும்.
இப்பொழுதே தீர்மானியுங்கள்!